## மொறட்டுவ மாநகர சபை

## கொழும்பு மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 12 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மொறட்டுவ மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 நிகழத்தக்க பொறுப்புக்கள்

வெளித்தரப்பினரால் மொறட்டுவ மாநகர சபைக்கு எதிராகத் தொடரப்பட்ட 10 வழக்குகள் மற்றும் சபையினால் வெளித்தரப்பினருக்கு எதிராக தொடரப்பட்ட 06 வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளை அவற்றுக்குரிய பட்டோலைகள் / அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 13,433,866 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) ஊழியர் பிணை வைப்புக் கணக்குகளினதும், ஊழியர் பிணை வைப்பு வட்டிக் கணக்கினதும் மீதிகளின் கூட்டுத்தொகை ஊழியர் பிணை முதலீட்டுக் கணக்கின் மீதிக்குச் சமமாக இருக்க வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்தக் கணக்கு மீதிகளுக்கிடையே ரூபா 25,297 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) பாணந்துறை பிரதேச சபையின் கழிவுப்பொருட்களை கறதியான கழிவுப்பொருள் தளத்திற்கு அகற்றுவதற்காக 2012 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக அந்த சபையிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,303,203 தொகை மற்றும் அதற்குரிய ரூபா 172,283 வரித் தொகையுடன்

ரூபா 1,475,486 நிலுவைத் தொகையை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வீதி விளக்குகளை பராமரிப்பதற்காக லங்கா மின்சாரக் கம்பனியிலிருந்து (தனியார்) கிடைக்க வேண்டிய ரூபா 10,140,025 தொகை பொதுத் திறைசேரியினால் மீளளிப்புச் செய்யப்படாமையினால் சபைக்கு கிடைக்க வேண்டிய அந்தப் பணத்தைத் தீர்த்தல் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பல வருட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ஆதனவரி மோசடி செய்தமையால் ஏற்பட்ட நட்டமான ரூபா 381,969 தொகையான மீதி நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், நட்டத்திலிருந்து ரூபா 241,749 தொகையை உத்தியோகத்தர் ஓய்வபெற்றுச் செல்லும் சந்தர்ப்பத்தில் அறவிடுவதற்கு 2011 பெப்ரவரி 14 ஆந் திகதி ஒழுக்காற்றுக் கட்டளை வழங்கப்பட்டிருந்தது. அதனை இதுவரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பெறவேண்டிய நிலுவை எரிபொருள் மீதி ரூபா 455,167 ஆக இருந்ததுடன் அப்பெறுமதியில் ரூபா 371,167 தொகை அதாவது 81.54 சதவீதம் மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(v) 1999 முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய இறைச்சி விற்பனை கடைகளிலிருந்து கிடைக்க வேண்டிய வாடகை ரூபா 645,055 தொகையை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 2000 சனவரி 20 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் LG/3/2000 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் களியாட்ட வரித்தொகை 10 சதவீதம் வரை குறைக்கப்பட்டமையால் சபை இழந்த ரூபா 3,228,197 தொகையான களியாட்ட வரித்தொகை கிடைக்க வேண்டிய தொகையொன்றாக வருமானக் கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(vii) 2014 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற கிடைக்க வேண்டிய விருந்தினர் விடுதிக் கட்டணம் ரூபா 526,500 தொகையை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) ரூபா 545,411 தொகையான மதிப்பிழந்த காசோலை மீதியில் உள்ளடக்கின்ற 2008 முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 506,828 பெறுமதியான 90 காசோலைகளின் பணத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) 2000 முதல் 2017 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 1,293,191 தொகையான முற்செலுத்திய மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்**

---

நிதிக்கூற்றுக்களில் பல வருட காலமமாகக் கொண்டுவரப்படுகின்ற அபிவிருத்தி ஒதுக்கம் ரூபா 10,000 தொகை மற்றும் நிதன் நிதிய மீதி ரூபா 89,210 தொகை

என்பன மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இனங்காணப்பட்டு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

விரிவான பட்டோலை, காலப்பகுப்பாய்வு மற்றும் இருப்பு மெய்மையாய்வு அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 25,169,542 கூட்டுத்தொகையான 10 கணக்கு விடயங்களை கணக்காய்வின்போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 இனங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம். | | |
| (i) நிதிப்பிரமாணம் 104(2) | 231,000 | மீளாய்வாண்டில் ஏற்பட்ட 03 வாகன விபத்துக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 156 | 732,071 | பொறுப்பின்றி செயற்படுகின்ற உத்தியோகத்தரின் அடிப்படையில் அராசங்கத்திற்கு ஏற்படுகின்ற நட்டத்தை அறவிட வேண்டியிருந்த போதிலும் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அறிக்கை அனுப்புதல் மற்றும் பங்களிப்புப்பணம் அனுப்புதல் என்பவற்றின் தாமதத்தின் அடிப்படையில் மிகைக்கட்டணம் செலுத்தப்பட்டமையால் சபைக்கு ஏற்பட்ட நட்டம் 2017 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் அதற்குப் பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 371(2) மற்றும் (5) | 188,402 | வழங்கப்பட்ட முற்பணம் உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாக அல்லது ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன் தீர்க்கப்பட வேண்டியிருந்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | போதிலும் 2000 முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 12,759 | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத செல்லுபடிக் காலத்தை விஞ்சிய 02 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (v) | நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | 9,066,794 | 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (vi) | நிதிப்பிரமாணம் 756 | 372,765,151 | நிறையான சொத்துக்கள் மற்றும் இருப்புக்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேறகொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (vii) | நிதிப்பிரமாணம் 1646 | - | சபைக்குரிய வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | | - | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.6 போதியளவான அதிகாரப் பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 188(1) ஆம் உபபிரிவின் கீழ் நிதிஏற்பாடு வழங்கப்படாத சபையின் 27 உறுப்பினர்களுக்காக திடீர் விபத்து மற்றும் சுகாதார காப்புறுதிகளுக்காக சபை நிதியத்திலிருந்து 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 629,690 மற்றும் ரூபா 1,059,832 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டு வரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,705,215 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 65,914,271 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 122,200 | 114,307 | 97,474 | 158,037 | 118,550 | 110,901 | 106,868 | 148,593 |
| வாடகை | 13,373 | 13,752 | 14,504 | 2,313 | 11,767 | 11,250 | 11,866 | 3,132 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 21,450 | 21,228 | 21,228 | 2,933 | 11,455 | 20,504 | 20,686 | 2,933 |
| ஏனைய வருமானம் | 642,832 | 507,038 | 509,751 | 114,719 | 618,510 | 561,904 | 560,255 | 95,940 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

2017ஆம் ஆண்டில் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தில் 17.84 சதவீதத்தையும், பாதீடு செய்யப்பட்ட மூலதன வருமானாத்தில் 85.66 சதவீதத்தையும் உழைப்பதற்கு சபை தவறியிருந்ததுடன் மீளாய்வாண்டில் உழைக்கப்படாத மொத்த வருமானம் ரூபா 400,095,273 ஆகும்.

### 2.2.3 வீதவரியும் வரியும்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 154,809,101 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 50,000 ஐ விஞ்சிய 162 ஆதனவரி அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 69,557,291 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ஆதனவரி ரூபா 101,366,060 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 41,298,410 தொகை அதாவது 41 சதவீதத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 142,331,668 ஆக இருந்த போதிலும், அதில் மீளாய்வாண்டின் போது ரூபா 39,198,739 தொகை அதாவது 28 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 103,132,929 தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

### 2.2.4 வாடகை

(அ) சபைக்குச் சொந்தமான வாடகைக்கு வழங்க முடியுமான 282 ஆதனங்களில் மீளாய்வாண்டில் 271 ஆதனங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,416,341 தொகையான திரண்ட நிலுவ மீதியில் உள்ளடக்கியுள்ள பல வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,418,207 தொகையான மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

(அ) 2017 ஆம் ஆண்டிற்காக வியாபார அனுதிப் பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டிய வியாபார கடைகளின் எண்ணிக்கை 3092 ஆக இருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 810 வியாபாரக் கடைகளுக்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரியதாக கிடைக்க வேண்டிய நிலுவை அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 2,933,175 தொகையை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**(அ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

(i) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 577,558 தொகையான 02 செயற்திட்டங்களின் வேலைகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) உள்நாட்டு நிதியீட்ட செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட வேண்டிய ரூபா 24,072,859 பெறுமதியான 36 செயற்திட்டங்கள் மற்றும் பொது நிதியத்தின் 15 செயற்திட்டங்கள் என்பன பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

(i) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 7,883,750 தொகையான கழிவுப்பொருள் வரி நிலுவையில் மீளாய்வாண்டில் ரூபா 1,725,750 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும், நிலுவைப் பணத்தை அறவிடும் விகிதம் 21.89 சதவீதமான நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

(ii) 2017 ஆம் ஆண்டில் வகைப்படுத்தப்பட்ட கழிவுப்பொருள் 16,074 தொன் மற்றும் வகைப்படுத்தப்படாத 12,451 தொன் கழிவுப்பொருட்கள் கறதியான கழிவுப்பொருள் தளத்தில் கையளிக்கப்பட்டிருந்ததுடன் கழிவுகளை சேகரித்தல் சரியான பிரகாரம் முகாமை செய்யப்படாமையினால் கலப்பு கழிவுப்பொருட்களுக்காக ரூபா 8,519,220 தொகை மேலதிகமாகச் செலுத்துவதற்கு சபைக்கு ஏற்பட்டிருந்தது.

(iii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கழிவுப்பொருள் வருமானம் ரூபா 12,052,900 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 6,158,000 தொகை முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை பெறுமதியாகும்.

(iv) கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபையினால் (மேல் மாகாணம்) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையாக சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், சபையின் புத்தகங்களில்

குறிப்பிடப்படாத ரூபா 22,063,395 தொகை மீளாய்வாண்டின் இறுதியிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

(அ) ஒவ்வொரு சுடலைக் கூடங்களுக்கும் விநியோகிக்கப்பட்ட எரிவாயு அளவினை இனங்காண்பதற்கு முறையான திட்ட முறைமையொன்று சபையினால் பேணப்படாதிருந்ததுடன், 37.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர் ஒன்றிலிருந்து எரிக்கக்கூடிய மனித உடல்களின் அளவு எவ்வளவு என பரீட்சிக்கப்படாமல் கோரப்பட்ட எரிவாயு அளவும் மயான நிலத்தின் ஊழியர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்குரிய பெறுமதி சேர் வரி அறிக்கை குறித்த தினத்தில் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 10,818,002 தொகையான தண்டப்பணத்துடன் ரூபா 31,059,351 தொகையான செலுத்தப்படாத பெறுமதி சேர் வரித்தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்துமாறு 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது சபைக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் பிரகாரம் வரிப் பொறுப்பிலிருந்து சபை விடுவிக்கப்படவில்லை.

(இ) 2012 யூலை 11 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் (மேல் மாகாணம்) WP/LGD/01/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் திட்டமிடல் குழுவின் பணிகள் தொடர்பாக மாதாந்த செயல்முன்னேற்ற அறிக்கை தயாரித்து அந்த அறிக்கை அடுத்துவரும் மாதத்தின் மாதாந்த சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்டநிலை | 21 | 17 | 04 | - |
| மூன்றாம் நிலை | 06 | 04 | 02 | - |
| இரண்டாம் நிலை | 233 | 185 | 48 | - |
| ஆரம்ப நிலை | 733 | 680 | 53 | - |
| ஏனையவை | - | 132 | - | 132 |
| | 993 | 1,018 | 107 | 132 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 107 வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியிருந்தது.

(ஆ) சிரேஷ்ட நிலையில் 04 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதன் காரணமாக சபையின் நடவடிக்கைகளை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(இ) தீயணைப்பு பிரிவில் பொறுப்பு வாய்ந்த 02 சேவைத் தொகுதிகளுக்குரிய 03 உத்தியோகத்தர்கள் வருடம் முழுவதும் வெற்றிடமாகக் காணப்பட்டனர்.

(ஈ) மருத்துவமனை உதவியாளர் பதவி, 2013 சனவரி 01 ஆந் திகதி முதல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும், அந்த பதவியில் சேவையாற்றுகின்ற 08 ஊழியர்களுக்காக ரூபா 3,651,088 தொகையொன்று மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) கராஜ் நிர்வகிப்பாளர் மற்றும் ஆயுதப் பொறுப்பாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாதிருந்த போதும், அந்த பதவிகளில் ஈடுபட்டிருக்கின்ற இரண்டு ஊழியர்களுக்காக ரூபா 814,789 தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) மயான நிலங்களின் பதவியணயினருக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 09 ஆக இருந்த போதிலும், சுடலைக்கூட செயற்படுத்துனர் பதவியொன்றும், சுடலைக்கூட பொறுப்பாளர் பதியொன்றும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(எ) வேலை நீக்கஞ் செய்யப்பட்ட மற்றம் ஒய்வு பெற்றுச் சென்ற 79 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 2,341,855 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் உள்ளடங்கிய 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 751,957 தொகையான கடன் மீதிகளிலிருந்து மீளாய்வாண்டில் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) செயற்பாடற்ற கடன் மீதி பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 128 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 1,573,647 ஆக இருந்ததுடன் அந்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) டெங்கு செயற்திட்டம்

(i) நகர சபை அதிகாரப் பிரதேசத்திற்காக டெங்கு நோய் ஒழிப்பு செயல்நடவடிக்கைத் திட்டமொன்று 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்படாதிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டின் போது 165 ஆகக் காணப்பட்ட டெங்கு நுளம்புக் குஞ்சுகள் வளரும் இடங்களின் எண்ணிக்கை மீளாய்வாண்டின் போது 814 வரை மிகவும் வேகமாக அதிகரித்திருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட சிவப்பு அறிவித்தல்களின் எண்ணிக்கை 435 முதல் 1571 வரையும், நுளம்புகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களுக்காக தொடர்ப்பட்ட வழங்குகளின் எண்ணிக்கை 155 முதல் 712 வரையும் அதிகரித்திருந்ததுடன் சபை அதிகாரப் பிரதேசத்தில் அறிக்கையிடப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை 500 முதல் 923 வரை 84.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவ்வாறே 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில்

சபை அதிகாரப் பிரதேசத்தில் டெங்கு நோய் மரணங்கள் அறிக்கையிடப்படாதிருந்த போதும், 2017 ஆம் ஆண்டின் போது இரண்டு டெங்கு நோய் மரணங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன.

**(ஆ) சபைக்குச் சொந்தமான காணிகளும் மயான நிலங்களும்**

(i) மொறட்டுவ மாநகர சபை பயன்படுத்தப்படுகின்ற 31 ஏக்கர் 03 றூட் 25.14 பேர்ச் இற்குரிய 114 சின்னக்கரை காணிகளினதும், கையேற்கப்பட்ட, நன்கொடையாகக் கிடைத்த, குத்தகைக் காணி மற்றும் ஏனைய காணிகள் என 47 காணிகளினதும், 05 மயான நிலங்களினதும் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான கையளிப்பு விபரங்கள் அல்லது உரித்துறுதி என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) சபைக்குரிய 560.86 பேர்ச் பரப்பளவுடைய 04 மயான நிலங்களின் விபரங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் 06 காணிகளின் நில அளவு எவ்வளது எனவும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(iii) நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் பிரபல்யமான றாவதாவத்த மயான நிலத்திற்குரிய காணியின் அளவு 01 ஏக்கர் 02 றூட் 4.9 பேர்ச் ஆக இருந்த போதிலும், கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதன் நில அளவு 03 ஏக்கர் 0 றூட் 14.05 பேர்ச் ஆனமையால் நில அளவில் 01 ஏக்கர் 02 றூட் 9.15 பேர்ச் அளவான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**(இ) முன்பள்ளிப் பாடசாலை அபிவிருத்தி**

2013 செப்தெம்பர் 04 ஆந் திகதிய 1826/23 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட IV ஆவது பகுதியின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட மேல் மாகாண சபையின் 2013 இன் 01 ஆம் இலக்க முன்பள்ளிப் பாடசாலை உறுப்புரையின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாணத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய 09 முன்பள்ளிப் பாடசாலைகள் பதிவு செய்யப்படாதிருந்ததுடன் உறுப்புரையின் VII ஆம் பகுதியின் பிரகாரம் தகைமைகளைப் பூர்த்தி செய்த 26 ஆசிரியைகள் பதிவு செய்திருக்கவில்லை.

**(ஈ) ஆதனங்களை மதிப்பீடு செய்தல்**

ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பிடு செய்து ஆதனவரி அறவிடப்பட வேண்டிய போதிலும், சபையினால் 2008 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) புதிய மின் பிறப்பாக்கியொன்றை பெற்றுக்கொள்வதற்காக செயற்படு நிலையில் காணப்பட்ட மின்பிறப்பாக்கி 2010 யூலை 28 ஆந் திகதி முதல் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதும் அது சபை வளவில் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்காக தேசிய சேமிப்பு வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற ரூபா 4,175,495 தொகையான மீதியுள்ள சாதாரண சேமிப்புக்

கணக்கில் ஆண்டின் போது எந்தவித கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) 01 வருடம் முதல் 07 வருடங்களுக்கு இடையிலான காலத்தில் ரூபா 21,580,865 பெறுமதியான வாகனங்கள் மற்றும் 16 இயந்திர உபகரணங்கள் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத ஏனைய வாகனங்கள் மற்றும் 10 ஏனைய சொத்துக்கள் என்பன பலவருட காலமாக நகர சபை வளவில் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

(ஈ) மத்திய சந்தைக் கட்டிடத்தின் இரண்டாவது மாடி 2010 ஒக்தோபர் 31 ஆந் திகதியின் பின்னர் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) லுனாவ செயற்திட்டத்திலிருந்து கிடைத்த வாகன உதிரிப்பாகங்களின் 26 வகைகளுக்குரிய 154 அலகுகள் மற்றும் மேலும் 305 வகைகளுக்குரிய 1277 அலகுகள் என்பன 2010 ஆம் ஆண்டு முதல் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

(ஊ) மொறட்டுவ நகரத்தில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாத றங்கன மண்டபம் பல வருட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(எ) சபைக்குரிய 04 உத்தியோகபூர்வ விடுதிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையினால் விளைவற்றும் குறைவான பயன்பாடுள்ள நிலையிலும் காணப்பட்டன.

(ஏ) லுனாவ அபிவிருத்தி செயற்திட்டம் முடிவடைந்திருந்த போதிலும் அதன் மீதியான ரூபா 6,820 தொகையை சாதாரண கணக்கில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் 2017 செப்தெம்பர் 13 ஆந் திகதி சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 632,500 பெறுமதியான பேலிங் இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.5.2 வாகனப் பயன்பாடு

--------------------------------

(அ) மொறட்டுவ மாநகர சபைக்குச் சொந்தமான 04 வாகனங்களின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) வெளி நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 03 வாகனங்கள் மற்றும் வாகனத் தொகுதியில் காணப்படுகின்ற UR Petrol மற்றும் UR Diesel என்ற இரண்டு தீயணைப்பு வண்டிகளும் சபைக்கு முறையே 1985 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற போதிலும் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மாற்றஞ் செய்யப்பட்ட 03 வாகனங்களிலிருந்து அகற்றப்பட்ட உபபாகங்கள் மற்றம் என்ஜின் என்பன களஞ்சியத்திற்கு கையளிக்கப்பட்டதை உறுதிப்படுத்துவதற்குரிய எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் 03 வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனங்களின் பதிவுச்

சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 25(1) ஆம் பிரிவு மற்றும் 99(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான வாகனங்களுக்காக 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிச் சான்றிதழ் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஆதனவரி வருமானத்தை முகாமைத்துவம் செய்வதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 850,556 தொகை செலவில் கணனி மென்பொருள் முறைமையொன்று கொள்வனவு செய்யப்பட்டு சேவை உடன்படிக்கைக்காக வருடாந்தம் ரூபா 111,945 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணனி மென்பொருளில் இருந்து பெறப்பட்ட தகவல்களில் காணப்படுகின்ற குறைபாடுகளை சரி செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.7 இனங்காணப்பட்ட நட்டம்

கம்பெக்டர் வண்டியைப் பழுதுபார்ப்பதற்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் தாமதமான காலம் 85 நாட்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 255,000 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.8 பெறுகைகள்

(அ) 2017 ஆம் ஆண்டிற்கு வழங்குனர்களைப் பதிவு செய்வதற்காக ரூபா 137,085 தொகை செலவில் 2016, செப்தெம்பர் 28 ஆந் திகதி செய்திப் பத்திரிகையில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், 10 விடயங்களுக்காக ஒரு வழங்குனரேனும் பதிவு செய்யாதிருந்ததுடன் 18 விடயங்களுக்காக இரண்டு வழங்குனர்களுக்குக் குறைவானவர்களே பதிவு செய்திருந்தனர்.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்யாத 07 வெளி வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை கோரி ரூபா 639,998 பெறுமதியான 04 விடயங்கள் 23 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) ஆண்டின் போது வருமானம் மற்றும் செலவின விடயங்களுக்கிடையே நிதிஏற்பாடுகளை மாற்றஞ் செய்ததன் பின்னரும் பாதீடு செய்யப்பட்டதற்கும் உள்ளபடியான வருமான செலவினங்களில் 2.69 சதவீதம் முதல் 82.28 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்ட 16 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் பாதீடு செய்யப்பட்ட மீண்டெழும் செலவினங்களில் 19.68 சதவீதமும், பாதீடு செய்யப்பட்ட மூலதனச் செலவினங்களில் 82.28 சதவீதமும் ஆண்டின் போது பயன்படுத்தப்படாதிருந்ததுடன் பயன்படுத்தப்படாத மூலதனச் செலவினம் ரூபா 421,788,242 ஆகும்.

(இ) செலவினத் தலைப்புக்களுக்கிடையே நிதிஏற்பாடுகளை மாற்றியதன் பின்னர் பாதீட்டு நிதிஏற்பாடு ரூபா 60,732,314 தொகை 150 மீண்டெழும் செலவின தலைப்புக்களிலிருந்தும், ரூபா 232,584,152 தொகை 38 மூலதன செலவு தலைப்புகளிலிருந்தும் மீளாய்வாண்டின் போது எந்தச் செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செலவினத் தலைப்புக்களுக்கிடையே நிதிஏற்பாடுகளை மாற்றியதன் பின்னர், தேறிய நிதிஏற்பாடு ரூபா 96,342,879 தொகையான 44 மீண்டெழும் செலவினத் தலைப்புக்களின் உள்ளபடியான செலவினம் ரூபா 119,287,141 ஆனமையால் ரூபா 22,944,262 இனால் பாதீட்டு நிதிஏற்பாட்டை விஞ்சியிருந்தது.

(உ) செலவின விடயங்களுக்கிடையே நிதிஏற்பாடுகளை மாற்றியதன் பின்னர் தேறிய நிதிஏற்பாடு ரூபா 8,824,848 தொகையான 4 மூலதன செலவின விடயங்களில் உள்ளபடியான செலவினம் ரூபா 30,434,037 ஆனமையால் ரூபா 21,609,189 இனால் பாதீட்டு நிதிஏற்பாட்டை விஞ்சி செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயற்பாடுகள் முறையாக ஒழுங்கமைக்கப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 4.3 தீர்க்கப்படாதுள்ள மற்றும் பதிலளிக்கப்படாதுள்ள கணக்காய்வு ஐய வினாக்கள்

மாநகர சபைக்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 09 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2018 மே 12 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 226,222,826 ஆகும். 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக வழங்கப்பட்ட 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதிலளிக்கப்பட்டிரக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) நிதிக் கட்டுப்பாடு | (i) சபைக்குச் சொந்தமான பணம் ஆக்கபூர்வமாக முதலீடு செய்யப்படாமை. |
| | (ii) இழப்பு மற்றும் நட்டம் தொடர்பாக உரிய பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| | (ii) வரி மதிப்பீடு உரிய காலத்தில் இடம்பெறாமை |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | தேவையின் அடிப்படையில் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாமை. |
| | | (ii) | வருமான மதிப்பீடு சாத்தியமானதாக இன்மை. |
| (ஈ) | நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புக் கட்டுப்பாடு | (i) | பதிவேடுகள் பேணப்படாமை மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை |
| | | (ii) | சொத்துக்களின் பாதுகாப்பிற்காக உரிய பிரகாரம் நடவடிககை எடுக்காமை மற்றும் சொத்துக்கள் வினைத்திறனாக முகாமைத்துவம் செய்யப்படாமை. |
| (உ) | பதவியணியினர் முகாமைத்துவம் | | முறையான அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றமை |
| (ஊ) | கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | | நிலுவை மீதிகள் தீர்த்து வைக்கப்படாமை |